**சுருக்கம்**

தொடக்கக் கல்வி – ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் – தொடக்கக் கல்வித் துறையில் பணியாற்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு 01.06.1988க்கு முன்பு இடைநிலை ஆசிரியர்களாகவும், தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தை 01.06.1988க்கு பின்னர் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த காலத்துடன் சேர்த்து தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ஜி2) துறை**

**அரசாணை (நிலை) எண்.216** **நாள் 30 .12.2011**

திருவள்ளுவர் ஆண்டு 2042
மார்கழி 14

படிக்க :–

1. அரசாணை (நிலை) எண்.234, பள்ளிக் கல்வித் (ஜி2) துறை, நாள் 10.09.2009.
2. அரசாணை (நிலை) எண்.270, பள்ளிக் கல்வித் (ஜி2) துறை, நாள் 20.09.2010.
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.13368/எல்1/ 2011, நாள் 23.05.2011 மற்றும் 27.10.2011.

–––––

**ஆணை :–**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்றுள்ள 63 நபர்களுக்கு மட்டும் அவர்கள் 01.06.1988க்கு முன் பணியாற்றிய இடைநிலை ஆசிரியர் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிக்காலத்தை கணக்கில் கொண்டு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை வழங்க தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. பின்பு, மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில், அவ்வரசாணை வெளியிடப்பட்ட நாள் வரை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து குறிப்பான ஆணை பெற்றவர்களுக்கு மட்டும் (restricted to those persons who have got specific order of the Court) மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையின் பலனை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது.

3. இந்நிலையில், மேலும் சுமார் 3137 ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மேற்கண்ட அரசாணைகளின்படி தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதிக்குமாறு கோரி வழக்கு தொடுத்ததில் சுமார் 137 ஆசிரியர்கள் இவ்வரசாணைகளின்படி பரிசீலனை செய்ய சாதகமாக தீர்ப்பாணை பெற்றுள்ளனர். மேலும் 3000 ஆசிரியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் நாளது தேதி வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது. எனவே, 01.06.1988க்கு பிறகு தொடக்கப்பள்ளி தலைமை

ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து ஒய்வு பெற்றவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.234, பள்ளிக் கல்வி (ஜி2)துறை, நாள் 10.9.2009 மற்றும் அரசாணை (நிலை) எண்.270, பள்ளிக் கல்வி (ஜி2) துறை, நாள் 20.09.2010ன்படி சுமார் 2263 ஆசிரியர்களுக்கு திருத்திய பணப்பலன்கள் பெற்று வழங்கப்பட்டதை போல மீதமுள்ள சுமார் 3137 ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் 1.6.1988க்கு முந்தைய பணிக்காலம் மற்றும் 1.6.1988க்கு பின்பு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதித்து ஊதிய நிர்ணயம் செய்தல் சார்பாக ஒரு பொதுவான அரசாணை பிறப்பிக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கோரியிருந்தார்.

4. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, இந்நிகழ்வில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்றவர்கள், வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெறாதவர்கள் மற்றும் வழக்கு தொடுக்காதவர்கள் ஆகிய அனைவரும் பயன்பெறும் வகையில், 01.06.1988க்கு முன்பு (அதாவது 31.05.1988 வரை) இடைநிலை ஆசிரியர்களாகவும், தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு 01.06.1988க்கு பின்னர் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த காலத்துடன் சேர்த்து தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதித்து, ஊதிய நிர்ணயம் செய்ய தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 66659/சிஎம்பிசி/2011 மற்றும் 66659/கல்வி II/2011, நாள் 30.12.2011–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–06.
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்,
(தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
(தொடக்கக் கல்வி இயக்குநர் வழியாக)
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–09.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09.
பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–09.
நிதி (கல்வி–II, சிஎம்பிசி) துறை, சென்னை–09.
பள்ளிக் கல்வி (எஸ் / வரவு செலவு) துறை, சென்னை–09.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்